# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.203/2014

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 16–03–2026.

பெயர் = சரவணன் பி.வா.சா.1

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி.–

(1) வாதி கிழமேல் தென்புறம் 1.1/2 அடி கிழமேல் வடபுறம் 5.3/4 அடிக்கு தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவாச்சொத்தானது ஆதியில் முத்துச்சாமி நாடாருக்கு பாத்தியமானது என்றால் சரிதான். முத்துச்சாமி நாடார் அவரது மகன் டாக்டர் முத்துச்சாமிக்கு 31.08.1981ல் பதிவு செய்த தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவருக்கு கிடைத்த தானச்சொத்தில் ஒரு பகுதி சொத்தை 1ம் வாதிக்கு 18.04.1988ல் பதிவு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு மேற்கே உள்ள சொத்து வாதியின் தகப்பனாருக்கு பாத்தியமானது என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கும் மேற்கே 1ம் வாதியின் வீடு உள்ளது என்றால் இல்லை. மாடசாமி என்பவர் பெயரில் வீடு உள்ளது என சாட்சி கூறுகிறார். மாடசாமி 1ம் வாதி நாகராஜனின் சகோதரர் பவுன்ராஜின் மகன் என்றால் எனக்குத்தெரியாது. 1ம் வாதியின் சகோதரர்கள் ஞானமணி, பவுன்ராஜ் என்றால் சரிதான். 1ம் வாதியின் தாயார் உண்ணாமலையம்மாள் என்றால் சரிதான்.

(2) 1ம் வாதியின் சகோதரனின் உடன்பிறந்தவர்கள் தாவாச்சொத்திற்கு மேற்கே உள்ள சொத்தைப் பொறுத்து 17.10.1986ல் அவர்களுக்குரிய பாகத்தை 1ம் வாதிக்கு பதிவு செய்த விடுதலை சாசனம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு மேற்கே 1ம் வாதிக்கு பாத்தியமான பூர்வீக வீடும், 3 அடி அகல காலியிடமும் இருந்தது என்றால் சரியல்ல. தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட வரும்போது நான் இருந்தேனா என்றால் ஆமாம். ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். என்ன ஆட்சேபணை தாக்கல் செய்தோம் என்றால் வாதி பெயரில் எந்த சொத்தும் கிடையாது என ஆட்சேபணை செய்துள்ளோம். நீதிமன்ற

ஆணையரின் வரைபடத்தில் AJKD Line ல் ஒரு அடியில் சிமிண்ட் கல் அமைப்பு ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான் என் இடத்தில் போட்டுள்ளேன் என சாட்சி கூறுகிறார். அதற்கும் கிழக்கே கழிவுநீர் வாய்க்கால் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு ஏற்படுத்தவில்லை என சாட்சி கூறுகிறார். வரைபடத்தில் ABCD AB=5.3/4 அடி CD=1.1/2 அடி என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு கிழக்கே உள்ள பிரதிவாதி வீடு NOPC என குறிப்பிட்டுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. NOCP =22.1/4 அடியும், NCOP=27 அடியும் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது.

(3) இந்த அளவுகள் குறித்து ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு எந்த பக்கம் என் வீடு உள்ளது என்றால் கிழக்கே உள்ளது. நான் வீடுகட்டிய இடம் கிழமேல் 32 அடியும், தென்வடல் 45.1/2 அடி என சாட்சி கூறுகிறார். நான் வீடு கட்டிய சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் மகேந்திரன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். 1ம் பிரதிவாதி விஜயலட்சுமி என் தாயார். 2ம் பிரதிவாதி கலைமதி என் அண்ணன் மனைவி. அவர் இந்த வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்திவில்லை என 2ம் பிரதிவாதி சொல்லி சென்றுவிட்டாரா என்றால் ஆமாம். என் அம்மா வீட்டில் உள்ளாரா என்றால் ஆமாம். என் தாயாருக்கு வயது 81. நல்ல நிலையில் உள்ளாரா என்றால் சுகர், பிரசர் உள்ளது. நடமாடிக்கொண்டிருக்கிறாரா என்றால் இல்லை இரண்டுபேர் தாங்கிபிடித்துதான் நடக்க முடியும் என சாட்சி கூறுகிறார்.

(4) வீடு உள்ள பகுதியில் கிரையம் வாங்கியுள்ளது என் தாயார் பெயரில் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் AJKD பகுதிக்கு மேற்கே நான் எந்த பாத்தியமும் கொண்டாடவில்லை என்றால் சரிதான். அதனைப்பொறுத்து வாதிக்கு தீர்ப்பு செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். வரைபடத்தில் GH அளவு 32 அடி என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த அளவுகள் சரிதானா என்றால் ஆமாம். தென்வடல் அளவுகள் 45.1/2 என்றால் சரிதான். ஆணையர் குறிப்பிட்டுள்ள அளவுகள் சரிதானா என்றால் ஆமாம். 32 அடிக்கும் மேற்கே சிமிண்ட் தளம் கட்டுவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் என் இடம் உள்ளது என சாட்சி கூறுகிறார்.

ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள J புள்ளிக்கு மேற்கே கல் உள்ளதா என்றால் ஆமாம். H புள்ளிக்கு மேற்கே எனக்கு கொஞ்சம் கூட இடம் கிடையாது என்றாலும், கல்தூண் ஊன்ற எனக்கு உரிமை கிடையாது என்றாலும் அதனை அகற்ற நான் கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள ABCD சொத்துக்கள் அனைத்தும் வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியமானது அதில் எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்கு கிழக்கே உள்ள வீட்டில் எனக்கு எந்த பாத்தியமும் கிடையாது என் தாயாருக்கு மட்டுமே பாத்தியம் என்றால் சரிதான்.

(5) மேற்படி சிமிண்ட் கல் அமைத்தது 2013ம் வருடம் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் 2007லேயே அமைத்துவிட்டதாக கூறுகிறார். எனக்கும், வாதிகளுக்கும் கிரையம் கொடுத்த முன்சுவான்தார் டாக்டர் முத்துச்சாமி தான் என்றால் நான் மகேந்திரன் என்பவரிடம் கிரையம் வாங்கினேன் மகேந்திரன் டாக்டர் முத்துச்சாமி என்பவரிடம் கிரையம் வாங்கியதாக சாட்சி கூறுகிறார். வாதி கிரையம் வாங்கியது 1988ல் நான் கிரையம் வாங்கியது 2006ம் வருடம். மகேந்திரன், அருணாச்சலம் கிரையம் வாங்கியது 1998 என்றால் சரிதான். வாதி கிரையம் வாங்கிய பிற்பாடுதான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். முத்துச்சாமி நாடார் அவரது மகன் டாக்டர் முத்துச்சாமிக்கு கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்கு மாலாக குமாரசாமி நாடார் வகையறா, பழனிச்சாமி நாடார் வீட்டிற்கும் பொதுச்சந்துக்கும் கிழக்கு என காண்பித்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

(6) வாதிக்கு கிரையம் கொடுத்தபோது மேற்குமாலாக தங்களின் 3 அடி அகல காலிஇடத்திற்கும கிழக்கு என காண்பித்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. வாதியின் பத்திரம் முன்பத்திரம் என்பதால் அதற்குபின்னர் கிரையம் வாங்கிய என்னை மேற்படி பத்திரம் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. 31.08.1981ம் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள அளவுகளைவிட பூமியில் உள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. நாங்கள் கிரையம் வாங்கும்போது வாதிகள் கிரையம் வாங்கியதை மறைத்து நாகராஜன் வகையறா வீட்டிற்கும் கிழக்கு என எங்கள் பத்திரத்தில் நான்குமால் காண்பித்துள்ளதை வைத்துக்கொண்டு பிரச்சனை செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. ஆணையர் வரும்போது தாவாச்சொத்தில் நான் அமைத்துள்ள சிமிண்ட் தளத்திற்கு அருகே கழிவுநீர் வாய்க்கால்

இருக்கிறது என காண்பித்துள்ளார் அதனை எப்போது அகற்றினேன் என்றால் அவ்வாறு வாய்க்காலே கிடையாது என சாட்சி கூறுகிறார்.

(7) என் வீட்டிற்கும் மேற்கே அரை அடி கூட விடாமல் வீடுகட்டிவிட்டு வீணாக வாதியுடன் பிரச்சனை செய்துவருகிறோம் என்றால் சரியல்ல. வாதிகளிடம் இருந்து சொத்தை திரும்ப பெறக்கேட்டு நான் பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் இல்லை. J புள்ளிக்கும் மேற்கே நான் ஊன்றியுள்ளது 5 அடி உயரமுள்ள ஒரு குத்துக்கல் என்றால் சரிதான். ஆணையர் வரைபடத்தில் AJKD பகுதியில் அமைத்துள்ள சிமிண்ட் தளத்தையும், J புள்ளிக்கும் மேற்கே உள்ள குத்துக்கல்லையும் அகற்ற நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. டவுண் சர்வேப்படிக்கும், ஆவணங்களின்படிக்கும் தாவாச்சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியமானது அதில் எங்களுக்கு பாத்தியமும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. என் தாயார் சாட்சியம் சொல்ல வந்தால் உண்மையை சொல்லிவிடுவார் என்பதால் அவருக்கு சுகர், பிரஷர் இருப்பதாக சொல்லி நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாவாச்சொத்தில் அவருக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் நீதிமன்றத்திற்கு வந்து வாபஸ் வாங்கி சென்றுவிட்டார் என்றால் சரியல்ல.

(8) தாவாச்சொத்திற்கு பட்டா வாதிகளின் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவாச்சொத்திற்கு கிழக்கே உள்ள வீடு சம்பந்தமானவை என்றாலும், தாவாச்சொத்திற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவாச்சொத்தில் எனக்கு எந்தவித பாத்தியமுமில்லை, அனுபவமுமில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் சிமிண்ட் தளத்தையும், குத்துக்கல்லையும் அகற்ற நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.16 15:02:44 +0530